திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் மாணவர்கள் அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளருக்கான நேர்காணலில் கிழக்கு மாவட்டச் செயலாளர் இ.பெ.செந்தில்குமார் கலந்துகொண்டு நேர்காணல் நடத்தினார். உடன் மாநில மாணவரணி இணைச் செயலாளர் பூவை ஜெரால்டு, துணை செயலாளர்கள் ஈரோடு வீரமணி, பொன்ராஜ், கிழக்கு, மேற்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர்கள் அஸ்வின் பிரபாகரன், தினேஷ் ஆகியோர் உடன் உள்ளனர்.

கேரளாவில் கனமழையின் காரணமாக ஏற்பட்ட

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொதுமக்கள், நிவாரண முகாம்களில் தங்கவைப்பு!

திருவனந்தபுரம், அக். 17 – கேரள மாநிலத்தில் கடந்த சில நாட்களாக அனைத்து மாவட்டங்களிலும் பரவலாக மழை பெய்து வருகிறது. குறிப்பாக திருவனந்தபுரம் மாவட்டத்தில் நேற்று முன்தினம் கனமழை கொட்டியது. இதனால் ஆறுகள் உட்பட நீர்நிலைகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது.

தாழ்வான பகுதிகளில் மழை நீர் தேங்கியது. மேலும் குடியிருப்பு பகுதிகளில் மழை வெள்ளம் புகுந்ததால் மக்கள் கடும் அவதிக்குள்ளாகினர். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் தங்குவதற்காக நிவாரண முகாம்கள் திறக்கப்பட்டன. திருவனந்தபுரம் மாவட்டம் முழுவதும் திறக்கப்பட் டுள்ள 21 நிவாரண முகாம்களில் மொத்தம் 900 பேர் தஞ்சம் அடைந்துள்ளனர்.

முகாம்களில் தங்கியுள்ள பொதுமக்களுக்கு உணவு உள்ளிட்ட அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்து கொடுக்க கேரள அரசு உத்தரவிட்டுள்ளது. கனமழை காரணமாக திருவனந்தபுரம் மாவட்டத்தில் உள்ள பள்ளி கல்லூரிகள் உள்ளிட்ட அனைத்து கல்வி நிலையங்களுக்கும் நேற்று விடுமுறை விடப்பட்டது.

இதற்கிடையே, கேரளாவின் பல்வேறு பகுதிகளில் மேலும் 4 நாட்களுக்கு மழை பெய்யும் என்று திருவனந்தபுரம் வானிலை ஆய்வு மையம் அறிவித்து உள்ளது. மேலும், கண்ணூர், காசர்கோடு, கோழிக்கோடு உள்பட 11 மாவட்டங்களுக்கு நேற்று மஞ்சள் எச்சரிக்கை விடப்பட்டது.

தேனி தெற்கு மாவட்டம் தேனி தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பாக முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாநில அளவிலான தனித்திறன் மற்றும் பல்வேறு போட்டிகள் கோம்பையில் நடைபெற்றது. போட்டிகளை தெற்கு மாவட்டச் செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார். தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் வசந்தன் ராமகிருஷ்ணன் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கினார். உடன் பாளையம் கிழக்கு ஒன்றியச் செயலாளர், அணைப்பட்டி முருகேசன், கோம்பை பேரூர் செயலாளர் முருகன், பேரூராட்சி தலைவர் முல்லை.மோகன்ராஜா, துணை அமைப்பாளர்கள் வேல்முருகன் சேதுராஜா, அருண் அரவிந்த், பிரசாத் , பிரவீன், கொடித்துறை, சித்திரேசன் மற்றும் கவுன்சிலர்கள்கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்

மாவட்ட வேலைவாய்ப்பு – ஊரக – நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் சார்பில்

தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்! பணி நியமன ஆணைகள்!

சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு வழங்கினார்!

மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ. – மேயர் பி.எம்.சரவணன் பங்கேற்பு!

நெல்லை, அக். 17 - முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டு மையம் மாநில ஊரக நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் சார்பில் நெல்லை வண்ணார்பேட்டையில் உள்ள பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரியில் தனியார் துறை சிறப்பு வேலைவாய்ப்பு முகாமில் சட்ட பேரவை தலைவர் மு.அப்பாவு பங்கேற்று 533 வேலை நாடுநர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

நெல்லை வண்ணார்பேட்டை பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரியில் வைத்து முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தனியார் துறை சிறப்பு வேலை வாய்ப்பு முகாம் மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன் தலைமையில் பாளை சட்ட மன்ற உறுப்பினர் மு. அப்துல்வகாப், மாநகராட்சி மேயர் பி.எம்.சரவணன், துணை மேயர் கே.ஆர்.ராஜு ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.இந்த

முகாமில் 104 நிறுவனங்கள் பங்கேற்றன.2123 வேலை நாடுநர்கள் பதிவு செய்துள்ளனர்.

இந்நிகழ்வில் சட்ட பேரவை தலைவர் மு.அப்பாவு பங்கேற்று 533 வேலை நாடுநர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கி பேசியதாவது.

இந்தியாவிலேயே தமிழ் நாட்டில் தான் 72 சதவீதம் பெண்கள் பட்டப்படிப்பு நடித்துள்ளனர். இதற்கு காரணம் சாதி, மதம்,இனம் அனைத்தையும் கடந்து அனைவரும் கல்வி கற்க வேண்டும், என்ற சமூக கல்வியை கொள்கையை வகுத்ததால் தமிழ்நாட்டில் கல்வி பெரும் வளர்ச்சி அடைந்துள்ளது.இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தில் தமிழர்கள் தலைசிறந்து திகழ்ந்து வருகின்றனர். முதலமைச்சர் அவர்கள் நேரில் அழைத்து பரிசுத்தொகை வழங்கி பாராட்டி கௌரவித்தார்கள். தமிழ்நாட்டில் நான் முதல்வன் திட்டத்தின் மூலம் மாண வர்கள் கல்வி கற்று திறனை வளர்த்துக் கொண்டு வேலைவாய்ப்பு பெறுவதற்காகவே இத்திட்டத்தினை கொண்டு வந்து சிறப்பாக செயல்படுத்தப் பட்டு வருகிறது.அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் நவீன தொழில் நுட்பத்திற்கு ஏற்ப மேம்படுத்தப்பட்டு தொழிற்கல்வி கற்பதற்கு புதிய பாடத்திட்டத்தினை உருவாக்கி, மாணவர்கள் படித்து முடித்தவுடன் வேலை வாய்ப்பு கிடைப்பதற்கான வாய்ப்புகளை முதல மைச்சர் அவர்கள் உருவாக்கியுள்ளார்கள்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தமிழ்நாடு முழுவதும் 100 தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் கள் நடத்த திட்டமிடப்பட்டு,இதுவரை 49 தனியார் துறை வேலை வாய்ப்பு முகாம் நடத்தப் பட்டு 18,330 வேலை நாடுநர்கள் பணி நியமனம் பெற்றுள்ளனர்.

நெல்லை மாவட்டத்தில் கடந்த 2 ஆண்டுகளில் 33 சிறிய அளவிலான வேலை வாய்ப்பு முகாம் நடத்தப்பட்டு 645 வேலை நாடுநர்கள் பணி நியமனம் பெற்றுள்ளனர். வேலை வாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டு மையம், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம்,தமிழ் நாடு சீருடை பணியாளர்கள் தேர்வாணையம், இணைந்து நடத்தப்படும் கட்டணமில்லா பயிற்சி வகுப்புகளில் கடந்த 2 ஆண்டுகளில் 214 மாணவர்கள் பங்கேற்று அரசு தேர்வுகளில் வெற்றி பெற்றுள்ளனர்.எனவே வேலை நாடும் இளைஞர்கள் அரசு சார்பில் நடத்தப் படும் வேலை வாய்ப்பு முகாமில் கலந்து கொண்டு பயன்பெற வேண்டும்.

இவ்வாறு பேரவை தலைவர் மு.அப்பாவு பேசினார்.

பின்னர் பேரவை தலைவர் மு.அப்பாவு மகளிர் சுய உதவிகுழு மூலம் அமைக்கப்பட்டுள்ள இயற்கை உணவு கண்காட்சியினை பார்வையிட்டார்.

நிகழ்வில் மாவட்ட ஊரக வளர்ச்சி திட்ட இயக்குனர் சுரேஷ், மண்டல இணை இயக்குனர் (வேலை வாய்ப்பு)சண்முக சுந்தர், மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டு மைய உதவி இயக்குனர் சகாய ஆன்டனி, மகளிர் திட்டம் உதவி திட்ட அலுவலர் உதயரோகினி, ஜோசப் சாமதுரை, சரவணப்பெருமாள், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சித்திக்,ஒன்றிய செயலாளர்கள் பி.சி.ராஜன்,ஜோசப் பெல்சி உள்பட அரசு அலுவலர்கள், மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

கல்வியை அனைவரும் கற்கும் வகையில்

பல்வேறு சீர்திருத்தங்களை உருவாக்கியுள்ளார் முதல்வர் மு.க.ஸ்டாலின்!

குன்றக்குடியில் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேச்சு!

சிவகங்கை, அக். 17 - சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் தொகுதிக்குட் பட்ட குன்றக்குடி தருமை கயிலை மேல்நிலைப் பள்ளியில் முதல்வரின் விலையில்லா மிதி வண்டி வழங்கும் நிகழ்ச்சி தேவகோட்டை கோட்டாட்சியர் பால்துரை தலைமையில் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் முன்னிலையில் நடைபெற்றது . நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் பாலுமுத்து வரவேற்றுப் பேசினார்.

நிகழ்ச்சியில் 100 மாணவ - மாணவிகளுக்கு முதல்வரின் விலையில்லா மிதிவண்டிகளை வழங்கி கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் பேசியதாவது. 40,ஆண்டுகளாக அரசியலில் உள்ளேன். 30 ஆண்டுகளாக மாவட்டச் செயலாளராக பணியாற்றி வருகிறேன். திருப்பத்தூர் தொகுதியில் நான்கு முறை சட்டமன்ற உறுப்பினராக உங்களது ஆதரவுடன் வெற்றி பெற்று பணியாற்றி வருகிறேன் . நான் வெற்றி பெற காரணம் தொகுதி மக்களாகிய நீங்கள் எனக்கு தரும் ஆதரவுதான் காரணம்ஆகும்.நான் உங்களுக்கு பணியாற்று வதை அடிப்படையாகக் கொண்டு எனக்கு தொடர்ந்து வாக்களித்து வெற்றி பெறச் செய்துவருகிறீர்கள் . தலைமைஇடும் கட்டளையை ஏற்று தலைமைக்கு நம்பிக்கை ஏற்படும்வகையில் விசுவாசமாக பணியாற்றி வருகிறேன். இதனால் எனக்கு அமைச்சர் பதவி இரண்டு முறை வழங்கப்பட்டது. முதல் முறை தலைவர் கலைஞர் தலைமையி லான அமைச்சரவை யில் ஐந்தாண்டுகள் அறநிலையத் துறை அமைச்சராக பணியாற்றி தலைவர் கலைஞரிடம் நன்மதிப்பை பெற்றேன். அதைத்தொடர்ந்து இப்பொழுது நல்ல வாய்ப்பு எனக்கு கிடைத்தது.

முதல்வர் தளபதி தலைமையி லான பொற்கால ஆட்சியில் முன்பு ஊரக வளர்ச்சி துறை அமைச்சராகவும், தற்போது கூட்டுறவுத் துறை அமைச்சராகவும் பணியாற்றி வருகிறேன். எத்தகைய அரசுப் பணிகள் இருந்தாலும் எனது தொகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளுக்கு நான் நேரில் சென்று மக்களை சந்திக்க விரும்புகிறேன். எத்தகைய சிறிய பெரிய அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சிக்கு நேரடியாக சென்று வழங்கி வருகிறேன்.

இதற்கு காரணம் பொதுமக்களை நேரில் சந்தித்தும், அவர்கள் தெரிவிக்கும் குறைகளை, அரசுக்கு தெரிவித்தும், அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு சென்று நிறைவேற்றிட வாய்ப்பாக கருதுகிறேன். அரசின் திட்டங்கள் முறையாக செயல்படுகிறதாஎன்றும் அதன் பயன் மக்களை சென்று அடைகிறதா என்பதையும் தெரிந்து கொள்ள வாய்ப்பாக அமைகிறது. இதற்காகவே நான் எனது தொகுதியில் அரசு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு நேரடியாக மக்களை சந்தித்து வருகிறேன். பொது வாழ்வில் அங்கீகாரம் தந்து என்னை உயர்ந்த நிலைக்கு கொண்டு சென்றவர் தலைவர் கலைஞர் ஆவார். அதற்கு முக்கிய காரணம் தலைமை யிடும் கட்டளையினை உங்கள் ஆதரவுடன் சிறப்பாக செயல்படுத் தியதே காரணம் ஆகும். உங்களுக்கு உதவிகளை நேரில் வழங்கிட இந்த வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ள முடிகிறது.இந்தப் பள்ளியில் ஆண்களுக்கான கழிவறை வசதி இல்லை என்ற கோரிக்கையினைகுன்னக்குடி சுப்பிரமணியன் தெரிவித்தார் . அது விரைவில் நிறைவேற்றி தரப்படும் என்று உறுதி கூறுகிறேன். இதேபோல் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்கள் தெப்பக்குளத்தை சீரமைத்து தரவேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளார். அதை விரைவில் சீரமைத்திட திட்டம் தருமாறு அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளேன். பள்ளி மாணவர்கள் படிப்பது முக்கியமான பருவ காலமாகும். வேறு எதிலும் கவனம் செலுத்தாமல் கல்வியை முழுமையாக நன்றாக படித்திட வேண்டும். பெற்றோர்கள் உங்களை உயர்நிலைக்கு வர வேண்டும் என்று நம்பி பள்ளிக்கு அனுப்புகிறார் கள் .உங்களை நல்ல ஒரு உயர்ந்த நிலைக்கு ஆசிரியர்கள் உங்களை செதுக்குகிறார் கள். வீட்டில் ஆயிரம் பிரச்சனைகள் இருக்கலாம். ஆனால் அதை நீங்கள் கண்டுகொள் ளவோ பொருட்படுத்திடவோகூடாது. எதிர்காலத்தில் நல்ல நிலைக்கு வர வேண்டும் என்ற எண்ணத்தில் படிப்பில் செலுத்த வேண்டும் .

இதனால் நீங்கள் உயர்ந்த நிலைக்கு வர முடியும். பொருளாதாரம் உயரும். உலக அளவில் நீங்கள் உயர்வதற்கான பணியை ஆசிரியர்கள் செய்து வருகிறார்கள். ராமேஸ்வரத்தில் ஓலை குடிசையில் ஏழை படகோட்டிக்கு மகனாக பிறந்த அப்துல் கலாம் அங்கு அரசு பள்ளியில் படித்தார். படிக்கும் போதே உயர்நிலைக்கு வர வேண்டும் என்று முடிவு செய்தார். அதனால் தான் அவர் உயர்ந்த நிலைக்கு வந்தார். அவரது

ஆசிரியர் அளித்த கல்வியும் அவரது தன்னம்பிக்கை முயற்சியும்தான் காரணம் ஆகும். உயர்நிலைக்கு வர வேண்டும் என் ற உறுதியால் அவர் விஞ்ஞானியாக வலம் வந்தார். இந்திய குடியரசுத் தலைவராக சிறப்பாக பணியாற்றினார். அவர் உயர்நிலைக்கு வருவதற்கான காரணம் அனைத்து மக்களின் நன்மதிப்பி னையும் பெற்றிருந்தார். கல்வி என்பது முன்பு எட்டாக்கனியாக; இருந்தது .அதை தலைவர் கலைஞர் அவர்கள் அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்று திட்டமிட்டு செயல்படுத்தி வெற்றி பெற்றார். தற்பொழுது தலைவர் கலைஞர் வழியில் தமிழக முதல்வர் தளபதி அவர்களும் கல்வியை அனைவரும் கற்கும் வகையில் பல்வேறு சீர்திருத்தங் களை ஏற்படுத்தி தந்துள்ளார் . எந்த செலவும் இல்லாமல் படிப்பதற்கான வழிவகையினை ஏற்படுத்தி தந்துள்ளார். கல்லூரி படிப்புக்கான கட்டண செலவையும் தமிழக அரசே ஏற்றுக் கொள்ளும் வகையில் முதல்வர் அறிவித்து அதை செயல்படுத்தி வருகிறார் . அதற்கான செலவுகளை அரசை ஏற்றுக் கொண்டுள்ளது. கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து இமையை கண்பாதுகாப்பது போல் கவனம் செலுத்தி வருகிறார். எனவே மாணவ மாணவிகள் நன்றாக படித்து ஒழுக்கத்துடன் உயர்நிலைக்கு வர வேண்டும். அதற்கு படிப்பில் சிறப்பாக கவனம் செலுத்த வேண்டும். பள்ளி படிப்பு முடிந்து உயர்கல்வி படிக்க விரும்பும் மாணவ மாண விகள் நாம் என்ன பாடத்தை எடுக்கலாம் என்று விரும்புவதை உங்களது ஆசிரியர்கள் உயர் கல்வி படித்துக் கொண்டிருக்கும் மாணவர்களுடன் கலந்து ஆலோசிக்க வேண்டும். அவர்கள் கூறும் ஆலோசனை யினை ஏற்று நீங்கள் விரும்பும் பாடங்களை தேர்வு செய்ய வேண்டும். இதன் மூலம் நீங்கள் நினைக்கும் லட்சியத்தினை அடைய முடியும். அகில இந்திய அளவில் உயர் கல்வி வளர்ச்சி 24 சதவீதம் தான்ஆகும் . ஆனால் தமிழகத்தில் உயர் கல்வி வளர்ச்சி 54சதம் ஆகும். இது இரண்டு மடங்கு அதிகமாகும். இதை கூடுதலாக பெற வேண்டும் என்று முதல்வர் அவர்கள் விரும்புகிறார் கள். .

இதற்காகத்தான் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறார். கல்விக்கு தனி கவனம் செலுத்தி வருகிறார் .ஒரு நாடு வல்லரசாக வேண்டும் என்றால் தொழில்துறை, வேளாண்மை துறை, மட்டும் போதாது. .கல்வியிலும் நன்கு முன்னேற்றம் அடைய வேண்டும். அப்பொழுது தான் நமது நாடு வல்லரசாக அமைய முடியும் .அதைத்தான் முதல்வர் அவர்கள் விரும்பு கிறார். எனவே நன்றாக படித்து இந்த லட்சியத்தை அடைய கவனம் செலுத்த வேண்டும். தமிழகத்தில் முதல்வரின் விலையில்லா மிதிவண்டிகள் 4,89,600 வழங்குவதற்கு ரூபாய் 235 கோடியே 92லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட் டுள்ளது. சென்னையில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 10.7.2023 ம்தேதி துவக்கி வைத்தார். நான் 23.7.2023 ம்தேதி சிவகங்கையில் துவக்கி வைத்தேன். இந்த தொகுதிக்கு உட்பட்ட 25 பள்ளிகளுக்கு நேரடியாக நான் சென்று முதல்வரின் விலையில்லா மிதிவண்டியினை வழங்கி உங்களை சந்தித்து வருகிறேன். இது எனக்கு மகிழ்ச்சியை தருகிறது. இப்பள்ளியில் படிக்கும் மாணவ - மாணவிகள் உயர்ந்த நிலைக்கு வர வேண்டும் என்று தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்கள் வாழ்த்தியதை நானும் முன்மொழிந்து உங்களை வாழ்த்துகிறேன். இவ்வாறு அமைச்சர் பெரிய கருப்பன் பேசினார். தலைமை ஆசிரியர் பாலசுப்பிரமணியம் நன்றி கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் பொதுக்குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே.எஸ்.ரவி, கல்லல் மேற்கு ஒன்றிய செயலாளர் குன்னக்குடி சுப்ரமணியன், ஒன்றிய கவுன்சிலர் மருது பாண்டியன், மாவட்ட ஊராட்சி துணை தலைவர் சரஸ்வதி கருணாநிதி, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி. ராஜ்குமார், ஆணையாளர் செழியன், வர்த்தக அணி சிவசுப்பிரமணியன், நிர்வாகிகள் முத்துமணி, கிளைசெயலாளர் சுப்பிரமணியன், புதூர் கண்ணன், ஒன்றியதுணை செயலாளர் முத்துக்குமார், ஊராட்சி மன்ற தலைவர் அலமேலு மங்கை விவேக், துணை தலைவர் கணேசன் அடிகளார் உதவியாளர் கவிஞர் சிங்காரம் சிறுபான்மை அணிசேவியர், வட்டாட்சியர் செல்லதுரை உட்பட அரசு அதிகாரிகள் ஆசிரியர்கள் மாணவர்கள் கலந்து கொண்டார்கள். நிகழ்ச்சியில் பிளஸ்டு மற்றும் எஸ்.எஸ்.எல்.சி. வகுப்பில் முதல் மூன்று இடம் பிடித்த மாணவ - மாணவிகள் ஆறு நபர்களுக்கு முதல் பரிசாக தலா ரூபாய் பத்தாயிரம் வீதம் 30ஆயிரம், இரண்டாம் இடம்பிடித்த 3மாணவமாணவிகளுக்கு தலா ரூபாய் 5 000 வீதம் ரூபாய் 15ஆயிரம், மூன்றாம் பரிசாக மூன்று பேர்களுக்கு ரூபாய் 3000 வீதம் 9000 பள்ளி புரவலர் நிதியாக ரூபாய் 10ஆயிரம் ஆகமொத்தம் ரூபாய் 64ஆயிரத்தை தனது சொந்த நிதியிலிருந்து அமைச்சர் பெரியகருப்பன் வழங்கி பாராட்டினார். தொடர்ந்து அமைச்சர் பெரியகருப்பன் பிரான்மலை மேல்நிலைப் பள்ளி சிங்கம்புணரி ஒன்றியம் கிருங்காகோட்டை ஆகிய மூன்று பள்ளிகளில் 107 மிதிவண்டிகள் உட்பட மொத்தம் 207 மிதிவண்டிகளை வழங்கினார்.

கழக இளைஞரணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவிப்புக்கு இணங்க மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. அறிவுறுத்தலின்படி திருப்பரங்குன்றம் வடக்கு ஒன்றியம் துவரிமான் கிராமத்தில் ஒன்றியச் செயலாளர் ஆர்.கே.ஜெயராமன், மாநகர் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சௌந்தர்ராஜன் ஆகியோர் தலைமையில் இளைஞர் அணி துணை அமைப்பாளர் துரை அன்புசெல்வன் முன்னிலையில் இல்லம் தேடி இளைஞர் அணி உறுப்பினர்கள் சேர்க்கை நிகழ்வு நடந்த போது எடுத்தபடம். உடன் திருப்பரங்குன்றம் வடக்கு ஒன்றிய நிர்வாகிகள், கிளை செயலாளர்கள் மற்றும் இளைஞர் அணியினர் கலந்து கொண்டனர்.

சேலம் இளைஞர் அணி மாநாடு :

‘இந்தியா கூட்டணி’யின் வெற்றிக்கான ஆரம்பமாக அமையும்!

சோழவந்தான் தொகுதி இளைஞரணி ஆய்வுக் கூட்டத்தில் அமைச்சர் பி.மூர்த்தி பேச்சு!

மதுரை, அக். 17 - மதுரை வடக்கு மாவட்ட சோழவந்தான் தொகுதியில் இளைஞர் அணி ஆய்வு கூட்டத்தில் சேலம் இளைஞர் அணி மாநாடு இந்தியா கூட்டணியின் வெற்றிக்கான ஆரம்பமாக அமையும் என மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.மூர்த்தி பேசினார்.

மதுரை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட சோழவந்தான் தொகுதியில் நடைபெற்ற இளைஞர் அணி ஆய்வுக்கூட்டத்தில் பேசிய மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி சேலத்தில் வருகிற டிசம்பர் 17ஆம் தேதி நடைபெறவுள்ள இளைஞர் அணி இரண்டாவது மாநில மாநாடு வருகிற நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியா கூட்டணியின் வெற்றிக்கான ஆரம்பமாக அமையும் என தெரிவித்தார்.

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் சோழவந்தான் தொகுதிக்குட்பட்ட அனைத்து ஒன்றியம் மற்றும் பேரூர் பகுதிகளில் தனித்தனியே சேலம் இளைஞர் அணி மாநில மாநாட்டில் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் பங்கேற்பது, இல்லம்தேடி இளைஞர் அணி உறுப்பினர் சேர்த்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் குறித்த ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு வடக்கு மாவட்டச்செயலாளர்- வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமை வகித்து சிறப்புரை ஆற்றினார்.

அப்போது பேசிய அவர் சேலத்தில் நடைபெற உள்ள இளைஞரணி மாநில மாநாடு இந்தியாவே திரும்பிப் பார்க்கும் வகையிலும், வருகிற நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியா கூட்டணியின் வெற்றிக்கான ஆரம்பமாகவும் அமையும், இந்தியாவிலேயே தமிழ்நாட்டை முதல் மாநிலமாக மாற்றுவதில் நமது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அயராது உழைத்துக் கொண்டிருக்கிறார், இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களும் பாராட்டும் வகையில் காலை உணவுத் திட்டம், மகளிர் உரிமை திட்டம், ஏழை வணிகர்களுக்கான சமாதானத்திட்டம் என பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளார்.

இந்த நல்லாட்சிக்கு மேலும் வலு சேர்க்கும் வகையில் சேலத்தில் டிசம்பர் 17ஆம் தேதி நடைபெறும் இளைஞர் அணி மாநில மாநாட்டில் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் பங்கேற்க வேண்டும். தமிழ்நாட்டிலேயே அதிகமான இளைஞர்கள் மதுரை வடக்கு மாவட்டத்திலிருந்து தான் பங்கேற்றார்கள் என்ற பெருமை கிடைக்கும் வகையில் நிர்வாகிகள் உழைக்க வேண்டும், இன்று பேரூர், ஒன்றியம், நகரம் என தனித்தனியாக நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தின் அடுத்த கட்டமாக தொகுதி வாரியாக கூட்டம் நடத்தப்படும். அந்தக் கூட்டத்தில் சேலம் மாநாட்டில் பங்கேற்கவுள்ள இளைஞரணியினர் இறுதி செய்யப்பட்டு சேலம் மாநாட்டில் பங்கேற்பார்கள் என தெரிவித்தார்.

மேலும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கிய கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பெண்கள் மத்தியில் நாளுக்கு நாள் ஆதரவு பெருகி வருகிறது. இது நம் இயக்கத்திற்கு கூடுதல் வலுசேர்க்கும் வகையில் அமைந்துள்ளது.

கழக இளைஞர் அணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் டிசம்பர் 17ஆம் தேதி நடைபெற உள்ள இளைஞர் அணி 2வது மாநில மாநாட்டில் பல லட்சம் பேர் பங்கேற்கும் வகையில் இளைஞர் அணியினருக்கு பல்வேறு ஆலோசனைகள் வழங்கி வருகிறார். இந்த மாநாடு வரும் நாடாளுமன்றத் தேர்தலில் நாற்பதுக்கு நாற்பது தொகுதிகளிலும் வெற்றி பெறும் வகையில் அமையும்.

வடக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் சுமார் முற்பதாயிரத்திற்கும் மேற்பட்டோர் மிடுக்கான உடைகள் அணிந்து வீறுநடை போட்டு அணிவகுத்து செல்லும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. இதுவரையில் எங்கும் நடந்திராத வகையில் காலை 10மணிக்கு துவங்கி மாலை 7மணிவரை இடைவிடாது காலம் கடந்தாலும் இளைஞர் அணி தம்பிமார்கள் கழகத்தினர் பொறுமையாக சுமார் 10மணி நேரம் ஆய்வுக் கூட்டத்தின் பணிகளில் பங்கேற்றதே பெரும் மகிழ்ச்சியளிக்கிறது எனப் பேசினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட துணைச் செயலாளர், சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், சோழவந்தான் தொகுதி பொறுப்பாளர் சுபத.சம்பத், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், அனைத்து ஒன்றியங்கள், பேரூர் கழகங்களின் செயலாளர்கள், நிர்வாகிகள், இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், கழகத்தினர், இளைஞர் அணியினர் உள்ளிட்ட திரளானோர் பங்கேற்றனர்.